கலாமின் விதைகள் வாட்சப் குழு

கு.கார்த்திக்குமார் - 9688389861

# தமிழ் 9ம் வகுப்பு

1. திருக்குறளில் "உடமை" என முடியும் அதிகாரங்கள் எத்தனை ?
   10

2. திருக்குறளுக்கு பெரிதும் தொடர்புடைய எண்?
   7

3. "கற்றவர் முந்தாம் கற்ற கல்வியைக் கூறல் இன்பம்" - இவ்வரிகளைப் பாடியவர் யார்?
   சுரதா

4. உவமைக்கவிஞர் யார்?
   சுரதா

5. உவமைக்கவிஞரின் இயற்பெயர் என்ன ?
   இராசகோபாலன்

6. உவமைக்கவிஞர் பிறந்த இடம் எது?
   பழையனூர் (திருவாரூர் மாவட்டம்)

7. "சுரதா" எனும் பெயரின் பொருள் என்ன ?
   சுப்புரத்தினதாசன்

8. சுரதா இயற்றிய கவிதை நூல்கள் எவை?
   தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்.

9. தமிழக அரசின் வளர்ச்சிதுறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு பெற்ற சுரதாவின் படைப்பு எது ?
   தேன்மழை

10. சுரதாவிற்கு கலைமாமணி விருது யாரால் வழங்கபட்டது?
    தமிழக இயலிசை நாடக மன்றம்

11. சுரதாவிற்கு தமிழக அரசு வழங்கிய சிறப்பு என்ன?
    பாவேந்தர் விருது

12. தேன்மழை நூலின் பகுதிகள் எண்ணிக்கை என்ன?
    16 பகுதிகள் (இயற்கை எழில் - ஆராய்ச்சி)

13. "கற்றவர் முந்தாம் கற்ற கல்வியைக் கூறல் இன்பம்" எனும் வரிகள் இடம்பெற்ற நூல், மற்றும் பகுதி என்ன?
    தேன்மழை நூலில் தேன் துளிகள் பகுதி

14. பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி, குமாரசாமி ஆகியோர் காமராசர் உதவியுடன் முதலமைச்சர்களாய் பதவியேற்ற ஆண்டுகள்?
    பிரகாசம் - 1945, ஓமந்தூர் ராமசாமி 1947, குமாரசாமி 1949

15. காமராசர் முதலமைச்சராக இருந்த போது எத்தனையாவது ஐந்தாண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டன?
    2,3

16. காமராசர் முதலமைச்சராக இருந்த போது பெரிய தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்ட இடங்கள் எது?
    கிண்டி, அம்பத்தூர், இராணிப்பெட்டை.

17. பொருத்துக

| | |
|---|---|
| நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை | - நெய்வேலி |
| இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை | - உதகை |
| அறுவைச் சிகிச்சை கருவித் தொழிற்சாலை | - கிண்டி |
| தொடர்வண்டிப் பெட்டி தொழிற்சாலை | - பெரம்பூர் |
| காகிதத் தொழிற்சாலை | - மேட்டூர் |

18. நில உச்ச வரம்பு –
    30 ஏக்கர்

19. புவனேசுவரில் காங்கிரஸ் கட்சி மாநாடு நடந்த ஆண்டு எது?
    1963

20. காமராசரின் பிறந்த நாள் –
    ஜூலை - 15 – 1903

21. கல்வி வளர்ச்சி நாள்?
    ஜூலை - 15 – 1903 (காமராசரின் பிறந்த நாள்)

22. தொழிற்பெயரை குறிக்க வரும் விகுதிகள் யாவை?
    தல், அல், அம், ஐ,கை,வை,கு,பு,உ,தி,சி,வி,உள்,காடு, பாடு,அரவு, ஆனை, மை,து,அல்

23. தொழிற்பெயரின் வகைகள் என்ன?
    முதனிலை தொழிற்பெயர்
    முதனிலை திரிந்த தொழிற்பெயர்

24. தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவது ...
    முதனிலை தொழிற்பெயர்

25. தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது ....
    முதனிலை திரிந்த தொழிற்பெயர்

26. பேறு, கேடு என்பது ...
    முதனிலை திரிந்த தொழிற்பெயர்

27. அடி என்பது ...
    முதனிலை தொழிற்பெயர்

28. வினையைக்குறிக்காமல் வினைசெய்தவரி குறிப்பது ...
    வினையாலணையும் பெயர்

29. பண்புப்பெயருக்கு அடிப்படையாக வருவது ..?
    நிறம், சுவை, அளவு, வடிவம்.

30. பண்புப்பெயர் விகுதிகள் யாவை?
மை,ஐ,சி,பு,உ,கு,றி,அம்,அர்,பம்,து

31. இலக்கணமுறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் … ஆகும்.
வழாநிலை

32. வாழாநிலைத் தருக
செல்வி பாடினாள் -
திணை வழாநிலை

நாய் ஓடியது -
பால் வழாநிலை

நீ வருவாய் -
இட வழாநிலை

தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் -
வினா வழாநிலை

நாளை வருவேன் -
கால வழாநிலை

தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என விடையளித்தல் -
விடை வழாநிலை

33. இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் .. ஆகும்.
வழு

34. வழுவின் வகைகள் யாவை ?
திணைவழு,பால்வழு,இடவழு,காலவழு,வினாவழு,விடைவழு, மரபுவழு.

35. வழு கூறுக :
என் மாமா வந்தது
திணைவழு

நாங்கள் வந்தார்கள்
இடவழு

கண்ணகி வந்தான்
பால்வழு

கரிகாலன் நாளை வந்தான்
காலவழு

முட்டையிட்டது சேவலா பெட்டையா ? -
வினாவழு

நாளை பள்ளி திறக்கப்படுமா ? எனும் வினாவுக்கு என் அத்தை உடல் நலமில்லை எனக்கூறுவது -
விடைவழு

நாய் கத்தும் -
மரபுவழு

36. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும் , இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது ...
வழுவமைதி

37. வழுவமைதிக்கு அடிபடையாக அமைவது எது ?
உவகை (மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம்

38. வழுவமைதி தருக
என் அம்மை வந்துவிட்டாள்
திணைவழுவமைதி

குடியரசுத்தலைவர் நாளை தமிழகம் வருகிறார் -
காலவழுவமைதி

39. மொழியாக்கம் தருக
Take away the fuel, the boiling will cease
எரிவதனைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்

Practice makes perfect

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

The law - maker should not be a law breaker

வேலியே பயிரை மேய்ந்தார்போல

Misfortune never comes single

பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்

Look no gift horse in the mouth

தானம் கொடுத்த மாட்டைப் பல்லை பிடித்துப் பார்க்கலாமா?

40. கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளல், காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை ஆராய்ச்சிக்கு அழகு தமது முடிவை துணுந்துரைத்தல் இசைக்கு அழகு அதனை கேட்போர் நன்றெனப் புகழ்தல், அரசனுக்கு அழகு குடிமக்கள வருந்தாமல் காப்பவன் என புகந்துரைத்தல் என காரியாசான் குறிப்பிடுகிறார்.

41. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் யார் ?
காரியாசான்

42. காரியாசானின் ஆசிரியர் யார் ?
மதுரை தமிழாசிரியர் மாக்காயனார்

43. காரியாசானின் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் எதில் காணப்படுகின்றன?
சிறப்புப்பாயிரம்

44. காரியாசான் எந்த மதத்தைச் சார்ந்தவர் ?
சமணம்

45. காரியாசானுடன் பயின்ற மாணவர் யார் ?
கணிமேதாவியார்

46. சிறுபஞ்சமூலத்தில் இடம்பெற்ற கருத்துக்களின் தன்மை என்ன ?
பெரும்பான்மை அறக்கருத்துக்களும், சிறுபான்மை சமண அறக்கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

47. சிறுபஞ்சமூலத்தின் பாடல்கள் எண்ணிக்கை என்ன ?
கடவுள் வாழ்த்து + 97 வெண்பாக்கள்

48. சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற காரணமான நோய் தீர்க்கும் 5 மூலிகைகள் எவை ?
கண்டங்கத்திரி, சிறுவழுதுனை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி

49. ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் அதன் பொருளும் பின்னர் பலவிடத்தும் வரின் அது ..... அணியாகும்.
சொல்பின்வருநிலையணி

50. வனப்பு எனும் சொல்லின் பொருள் என்ன?
அழகு

51. "கண்வனப்புக் கண்ணொட்டம்.... " எனத் தொடங்கும் பாடலின் பயின்று வந்த அணியின் பெயர் என்ன ?
சொல்பின்வருநிலை அணி

52. பாண்டவர்கள் ஆட்சிபுரிந்த பிரதேசம் எது ?
இந்திர மாநகர் (இந்திர பிரஸ்தம்)

53. அத்தினாபுர மன்னர் யார் ?
துரியோதனன்

54. துரியோதனின் தந்தை யார் ?
திருதராட்டிரன்

55. "என்பியின் மக்க ளிருந்தர சாளும்..." இத்தொடரின் எம்பி என்பது யாரை குறிக்கும் ?
பாண்டு மன்னன்

56. இலக்கண குறிப்பு தருக
மாநகர்
உரிசொற்றொடர்

57. ".... கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்.." இத்தொடரில் மடப்பிடி யாரை குறிக்கும் ?
பாஞ்சாலி

58. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய உரைநடை இலக்கியங்கள் யாவை ?
ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு.

59. பாஞ்சாலி சபதத்தின் மூல நூல் எது ?
வடமொழியில் வான்மீகி எழுதிய பாரதம்.

60. பாஞ்சாலி சபதம் எத்தனை பாகங்களை கொண்டது ?
2

61. பாஞ்சாலி சபதத்தின் சருக்கங்கள் எத்தனை ?
5. (சூழ்ச்சி சருக்கம், சூதாட்ட சருக்கம், அடிமைச்சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபத சருக்கம்)

62. பாஞ்சாலி சபதத்தின் பாடல்களின் எண்ணிக்கை என்ன ?
412

63. பாரதியார் ஆசிரியராக இருந்த இதழ்களின் பெயர் என்ன ?
சுதேசமித்திரன், இந்தியா

64. தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை என்றவர் யார் ?
பாரதிதாசன்

65. தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

66. நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா எனப்பட்டவர் யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

67. உரைநடைக்காலம் எது ?
20ம் நூற்றாண்டு

68. 20ம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக்கு வித்தாக அமைந்தவை எவை ?
பாரதியின் கவிதைகள்

69. "முப்பது கோடி முகமுடையாள்.. " எனப்பாடியவர் யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

70. "முப்பது கோடி முகமுடையாள்.. " எனும் பாடலில் கவிஞர் கூற வந்த மைய கருத்து என்ன ?
இந்திய ஒருமைப்பாடு

71. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் " என்றவர் யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

72. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் " எனும் பாடலின் மையக்கருத்து என்ன ?
தமிழின் வளர்ச்சி

73. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே எனப்பாடியவர் யார் ? அவர் கூறவந்த கருத்து என்ன ?
பாரதிதாசன். தமிழர் எழுச்சி

74. எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம் அல்லானும் அங்கில்லை பிறர்நலத்தை எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே" இப்பாடலின் மையக்கருத்து என்ன ?
பொதுவுடைமை

75. "கல்லை பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் திடுத்தவனும் நீதானோ" எனத் தாலாட்டுப் பாடியவர் யார்
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

76. "மங்க யராகப் பிறப்பதற்கே - நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என பெண்ணியம் பாடியவர் யார் ?
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

77. தமிழின் வளம் காண "சாலைகளில் பலதொழில்கள் பெருக வேண்டும் சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்" என்றவர் யார் ?
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

78. விடுதலைக் கவிஞர் யார் ?
நாமக்கல் கவிஞர்

79. உவமைகவிஞர் யார் ?
சுரதா

80. தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கோர் குணமுண்டு அமிழ்தம் அவனுடை மொழியாகும் அன்பே அவனுடை வழியாகும் என்றவர் யார் ?
நாமக்கல் கவிஞர்

81. பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும் பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும் என்றவர் யார் ?
நாமக்கல் கவிஞர்

82. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்றவர் யார் ?
நாமக்கல் கவிஞர்

83. ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால் அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற தீங்குடைய மனபோக்கர் வாழும்நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி : இவ்வடிகள் யாரால் எழுதப்பட்டது ?
முடியரசன்.

84. பாரதியார் வசன கவிதைகளை யாருடைய சாயலை ஒத்திருந்தன ?
அமெரிக்க கவிஞர் வால்ட்விட்மன்

85. பாரதிதாசனின் உரைநடைகள் அனைத்தும் .... கொண்டவை.
கவிதை நடை கொண்டவை

86. மணிக்கொடி இதழில் புதுக்கவிதை எழுதியவர்கள் யார் ?
ந.பிச்சமூர்த்தி, புதுமைபித்தன், கு.ப.இராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன்

87. எழுத்து இதழில் புதுக்கவிதை எழுதியவர்கள் யார் ?
எஸ்.வைத்தீஸ்வரன், தருமு சுவராமு, மணி, சி,சு.செல்லப்பா

88. மீரா என்ற புனைபெயர் கொண்டவர் யார் ?
மீ.ராசேந்திரன்

89. வானம்பாடி இயக்க உறுப்பினர்கள் யார் ?
புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிபுத்திரன், சக்திகனல்,இரவீந்திரன்,ஞானி,பா,செயப்பிரகாசம்,பிரபஞ்சன்,பாலா, கோ.ராஜாராம்.

90. ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகின்றன எனப்பாடியவர் யார் ?
வல்லிகண்ணன்

91. உச்சிமலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்குது ஒற்றுமையில்லா மனித குலம் உயர்வு தாழ்வு வளர்க்குது எனப்பாடியவர் யார் ?
பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

92. கண்ணதாசன் படைத்த நெடுங்கவிதை நூல்கள் எவை ?
ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லகுடி, மகாகாவியம், இயேசுகாவியம்

93. கம்பர் - அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாக கொண்டு கண்ணதாசன் படைத்த நாடகத்தின் பெயர் என்ன ?
இராசதண்டனை

94. கண்ணதாசன் படைத்த புதினங்களின் பெயர் என்ன ?
ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி, வேலங்குடி திருவிழா

95. கண்ணதாசனின் சிறந்த வரலாற்று புதினம் எது ?
சேரமான் காதலி

96. சாகித்திய அகாதெமி விருது பெற்ற கண்ணதாசனின் புதினம் எது ?
சேரமான் காதலி

97. கண்ணதாசன் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் எவை ?
தென்றல், முல்லை. கண்ணதாசன், தமிழ் மலர்.

98. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்றவர் யார் ?
கண்ணதாசன்.

99. சாகித்திய அகாதெமி யாருடையது ?
நடுவண அரசு

100. இரு எழுத்து தனித்தும் பல எழுத்துக்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது .... ஆகும்.சொல்

101. சொல் ஐ குறிக்கும் வேறு பெயர்கள் என்ன ?
பதம், கிழவி, மொழி

102. பதம் எத்தனை வகைப்படும்?
2

103. மரம், நாய், நீர் ஆகியவை எதற்கு உதாரணம் ?
பெயர்ப் பகாபதம்

104. தில்,மன்,பிற ஆகியவை எதற்கு உதாரணம் ?
இடைப் பகாபதம்

105. வினை பகாபதத்திற்கு உதாரணம் தருக
உண், காண், எடு

106. உரிப்பகாபததிற்கு உதாரணம் தருக
சால, நனி, கடி, உறு

107. இடைசொல்லும், உரிச்சொல்லும் .... ஆக இருக்கும்
பகாபதங்களாக

108. பகுதி விகுதி இடைநிலை எனப்பிரிக்கப்படுவது ... எனப்படும்
பகுபதம்

109. பெயர் பகுபததிற்கு அடியாக இருப்பது எது ?
பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்

110. பிரித்து கூறுக
பொன்னன்
பொன்+ன்+ன்

ஊரன்
ஊர்+அன்

ஆதிரையான்
ஆதிரை+ய்+ஆன்

**கண்ணன்**

**கண்+ண்+அன்**

**கரியன்**

**கருமை+அன்**

**நடிகன்**

**நடி+க்+அன்**

**செய்தான்**

**செய்+த்+ஆன்**

111. பகுபத உறுப்புகள் யாவை ?
பகுதி, விகுதி,இடைநிலை, சந்தி,சாரியை, விகாரம்.

112. பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தருவது .. ஆகும்
பகுதி

113. பகுபதத்தில் இறுதியில் நின்று பொருள் தருவது .. ஆகும்
விகுதி

114. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது ...
இடைநிலை

115. நிகழ்கால இடைநிலைகள் யாவை ?
கிறு,கின்று, ஆநின்று

116. இறந்தகால இடைநிலைகள் யாவை ?
த்,ட்,ற்,ன்

117. எதிர்கால இடைநிலைகள் யாவை ?
ப்,வ்

118. எதிர்மறை இடைநிலைகள் யாவை ?
இல்,ஆல்,ஆ

119. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது ...
சந்தி

120. பெயர்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது ...
சாரியை

121. சொற்களிடையில் ஏற்படும் மாறுபாடு ... ஆகும்
விகாரம்

122. பகுதி தருக
படித்தான் - படி
ஓடினான் - ஓடு
வந்தான் - வா

123. விகுதி தருக
நடந்தான் (ஆண்பால் விகுதி)
ஆன்

நடந்தாள் (பெண்பால் விகுதி)
ஆள்

நடந்தனர் (பலர்பால் விகுதி)
அர்

நடந்தது (ஒன்றன்பால் விகுதி)
அது

நடந்தன (பலவின்பால் விகுதி)
அன

124. இடைநிலை தருக

| | |
|---|---|
| உண்கிறான் | - கிறு |
| உண்கின்றான் | - கின்று |
| உண்ணாநின்றான் | - ஆநின்று |
| பார்த்தான் | - பார்+த்+த்+ஆன் |
| உண்டான் | - உண்+ட்+ஆன் |
| வென்றான் | - வெல்(ன்)+ற்+ஆன் |
| பாடினான் | - பாடு+இன்+ஆன் |
| உண்பான் | - உண்+ப்+ஆன் |
| வருவான் | - வா(வரு)+வ்+ஆன் |
| உண்டிலன் | - உண்+ட்+இல்+அன் |

காணலன் - காண்+அல்+அன்
பாரான் - பார்+ஆ+ஆன்

125. சந்தி தருக
பார்க்கிறான் - பார்+க்+கிறு+ஆன்
படித்தான் - பார்+ஆ+ஆன்

126. சாரியை தருக
உண்டனன் - உண்+ட்+அன்+அன்

127. சாரியைகள் யாவை ?
அன்,ஆன்,இன்,அல்,அற்று,இற்று,அத்து,அம்

128. தன்னோடு தொடர்புடைய ஒன்றைகூறி பொருளுக்கு பெயராகு வருவது
ஆகுபெயர்

129. ஆகுபெயரின் எத்தனை வகைப்படும்?
16

130. ஒன்று பெற்றார் ஒளி மயம். இதில் ஒன்று என்பது... ஆகுபெயர்
எண்னல் அளவையாகுபெயர்

131. ஐந்து கிலோ என்ன விலை? இதில் கிலோ என்பது... ஆகுபெயர்
எடுத்தல் அளவையாகுபெயர்

132. 4 லிட்டர் தேவை. இதில் லிட்டர் என்பது... ஆகுபெயர்
முகத்தல் அளவையாகுபெயர்

133. மூன்று மீட்டர் கொடு. இதில் மீட்டர் என்பது... ஆகுபெயர்
நீட்டல் அளவையாகுபெயர்

134. அளவுத்தொடர்களுக்கு எடுத்துக்காட்டு தருக
ஒன்று கொடு, நாலுகிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் கொடு.

135. பொருள்கோள் எத்தனை வகைப்படும் ?
8

136. ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும் என்பன ..... ஆகா
ஆகுபெயர்

137. ஒரு செய்யுளின் சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறை... ஆகும்
பொருள்கோள்

138. "பொறிவாயில் ஐந்தவித்தான்.. " எனும் குறளில் ....... பொருள்கோள் அமைந்துள்ளது.
ஆற்றுநீர்ப் பொருள்கோள்

139. "சுரையாழ அம்மி மிதப்ப ... " எனும் பாடலில் ....... பொருள்கோள் அமைந்துள்ளது.
மொழிமாற்றுப் பொருள்கோள்

140. சொற்களை முறை மாற்றாமல் அப்படியே பொருள் கொள்வது .. ஆகும்
ஆற்றுநீர்ப் பொருள்கோள்

141. சொற்களை முன்பின்னாக மாற்றி பொருள்கொள்வது ... ஆகும்
மொழிமாற்றுப் பொருள்கோள்

142. செய்யுளின் இருக்கிற சொற்களை முறைமாற்றாமல் பொருள் கொள்வது ... ஆகும்
நிரல்நிறைப் பொருள்கோள்

143. "அன்பும் அறனும் உடைத்தாயின்.. " எனும் குறளில்....... பொருள்கோள் அமைந்துள்ளது.
நிரல்நிறைப் பொருள்கோள்

144. "இருட்பகை இரவி இருளேனத் தம்மையும் கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக் கயான் மார்பிற் புடைத்துக் கலங்கி மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம் பதறி திசையிலும் சிதறியோடுதலும்.. " எனும் பாடலில் பயின்று வந்த அணி... ?
தற்குறிப்பேற்ற அணி

145. வைக்கோலும் யானையும் ஒன்று எனப்பாடியவர் யார் ?
காளமேகப்புலவர்

146. வேர்ச்சொல் காண்க
போவேன் - போ
கற்பேன் - கல்
பிளிறும் - பிளிறு
அடக்கினார் - அடக்கு
பெற்றது - பெறு

147. மாறியுள்ள சொற்களை வரிசைப்படுத்துக
கிழக்கு திசைக்கு பெயர் உதிக்கின்ற ஞாயிறு
ஞாயிறு உதிக்கின்ற திசைக்குப் பெயர் கிழக்கு

பிறப்பிடம் துன்பத்துக்கும் சோம்பலே தீமைக்கும்
தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம் சோம்பலே

பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும்
போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

148. வினைமுற்று தருக
துள்ளி ஓடிய புள்ளிமான்
புள்ளிமான் துள்ளி ஓடியது

மிகவும் இனித்த பழம்
பழம் மிகவும் இனித்தது

பாடம் படித்த வைகறை செல்வி
செல்வி வைகறையில் பாடல் படித்தாள்

நீதி தவறாத மன்னன்
மன்னன் நீதி தவறாதவன்
நேற்று பெய்த மழை
நேற்று மழை பெய்தது

149. வாஷிங்டன் யார் ?
அமெரிக்க குடியரசு தலைவர்

150. தமிழாக்கம் தருக

Crying child will get the milk

அழுத பிள்ளை பால் குடிக்கும்

Make hay while the sun shines

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

The childhood shows the man

விளையும் பயிர் முளையிலேயே தெரியும்

All is well that ends well

முதற்கோணல் முற்றிலும் கோணல்

A good marksman may miss

ஆனைக்கும் அடி சறுக்கும்

151. நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க திருக்குறள் ... அறநூல்களைக் கற்றல் வேண்டும்

முதலான

152. நாம் பண்பாட்டில் சிறந்து விளங்க நற்றிணை, குறுந்தொகை .... எட்டுத்தொகை நூல்களை கற்றல் வேண்டும்

முதலிய

153. இயல், இசை, நாடகம் ... முத்தமிழை போற்றி வளர்த்தல் வேண்டும்.

ஆகிய

154. "ஓடிப்போ ஓடிபோ கெண்டைகுஞ்சே.." எனப்பாடியவர் யார் ?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

155. மக்கள் கவிஞர் யார் ?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

156. மாக்கவி யார் ?

சுப்பிரமணிய பாரதியார்

157. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அறிமுகமான திரைப்படம் எது? வெளியான ஆண்டு ?

படித்த பெண், 1954

158. நீ மீண்டும் தோன்றிய பாரதியடா என்று யார் யாரை பார்த்துக் கூறினார்?
தோழர் ஜீவானந்தம்,பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

159. தேனாறு பாயுது செங்கதிரும் காயுது ஆனலும் மக்கள் வயிறு காயுது எனப்பாடியவர் யார் ?
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

160. நான்கு என்பதன் அடிப்படை ...
நாலு

161. "உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஒர்க் கும்மே" இப்பாடல் வரியின் ஆசிரியர்?
நக்கீரனார்

162. சொற் பொருள் : மா?
விலங்கு

163. இலக்கண குறிப்பு:
நாழி?
ஆகுபெயர்

164. புறநானூறு பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்?
ஜி.யு. போப்

165. திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆசிரியர்??
நக்கீரனார்

166. " நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்" இடம் பெற்ற நூல் & ஆசிரியர்??
குறுந்தொகை, தேவகுலத்தார்

167. குறுந்தொகை தொகுத்தவர்??
பூரிக்கோ

168. குறுந்தொகையின் அடிவரையறை??
4-8

169. குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை?
401

170. காற்று மண்டலத்தில் உயிர்வளி, உப்புவளியின் சதவீதம்?
21%, 78%

171. வளிபடலத்தைச் சிதைப்பதில் பெரும் பங்கு வகிப்பது?
குளோரோ புளூரோ கார்பன்

172. நிலத்தின் வெப்பநிலையை ஒரே சீரான நிலையில் வைத்திருக்கப் பெரிதும் உதவும் மண்டலம்?
அடிநிலை மண்டலம்

173. அடி எத்தனை வகைப்படும்?
5

174. அளவடியின் மற்றொரு பெயர்??
நேரடி

175. அடிதோரும் 4 (அ) 5 சீர்களைப் பெற்று வரும் அடி?
கழிநெடிலடி

176. தொடை எத்தனை வகைப்படும்?
8

177. "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்" இதில் இடம் பெற்ற தொடை?
முரண்தொடை

178. தொடை விகற்பங்கள் எத்தனை?
35

179. (1,3) என முதல் எழுத்து ஒன்றி வருவது?
பொழிப்பு மோனை

180. (1,2,3) என முதல் எழுத்து ஒன்றி வருவது?
கூழை மோனை

181. (1,2,4) என முதல் எழுத்தை அடுத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது?
கிழ்கதுவாய் எதுகை

182. (1,3,4) என முதல் எழுத்தை அடுத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது?
மேற்கதுவாய் எதுகை

183. " பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேர தார்" இடம் பெற்ற அணி?
ஏகதேச உருவக அணி

184. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" இடம் பெற்ற அணி?
நிரல்நிறை அணி

185. அறிவன் என அழைக்கப்படும் கோள்?
புதன்

186. 1/2 ன் தமிழ் எண்?
இ

187. 1/4 ன் தமிழ் எண்?
வ

188. 3/4 ன் தமிழ் எண்?
ளு

189. 1000 ன் தமிழ் எண்?
௲

190. 9 ன் தமிழ் எண்?
௯

191. "தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே" எனப்பாடியவர் யார் ?
கம்பர்

192. பொருள் தருக :

அலகிலா

அளவற்ற

சரண்

அடைக்கலம்

193. இலக்கண குறிப்பு தருக :

யாவையும்

முற்றும்மை

அலகிலா விளையாட்டு

ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

194. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" எனும் பாடல் அமையப்பெற்ற நூலின் பெயர்,காண்டம் என்ன ?

கம்பராமாயணம், பாலகாண்டத்தின் முதல் பாடல்.

195. நிறையுடைமை நீங்காமை வேண்டின் , பொறையுடைமை போற்றி ஒழுகப் படும் " எனும் குறட்பாவில் கூறப்படும் கருத்து

பொறுமையின் சிறப்பு

196. குறள் எனும் சொல்லின் பொருள் என்ன ?

குறுகிய அடிகளை உடையது

197. ....... சீர்களைக் கொண்ட .... அடி வெண்பாக்களால் ஆனது, திருக்குறள்.

7, 2

198. திருக்குறள், அறம்.... அதிகாரங்களாகவும், பொருள் .... அதிகாரங்களாகவும், இன்பம் ..... அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது.

38,70,25

199. திருக்குறளைப் போற்றிப் பாடிய நூலின் தொகுப்பு ....ஆகும்.

திருவள்ளுவமாலை

200. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களின் எண்ணிக்கை ...
10

201. திருக்குறளின் உரை கண்டவர்களுள் மிகச்சிறந்த உரை யாருடையது ?
பரிமேலழகர்

202. திருக்குறளின் உரையாசிரியர்கள் யாவர்?
தருமர், தாமதத்தர், மணக்குடவர், நச்சர்,பரிதி,பரிமேலழகர்,திருமலையர், மல்லர், பரிபெருமாள், காளிங்கர்.

203. விக்டோரியா மகாராணி காலையில் கண் விழித்ததும் முதலில் படிக்கும் நூல் எது ?
திருக்குறள்

204. இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள் எத்தனை ? அவை யாவை?
4, இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ - ஆசிய மொழிகள், சீன- திபெத்திய மொழிகள்

205. நம் நட்டில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை என்ன ?
1300+

206. தனக்கெனத் தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழி ....
மூலமொழி

207. மூல மொழியிலிருந்து தோன்றி வளர்ந்த மொழி ....
கிளைமொழி

208. இந்திய நாட்டை "மொழிகளின் காட்சி சாலை" என வருணித்தவர் யார் ?
மொழியியல் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்

209. திராவிட மொழிகளின் எண்ணிக்கை என்ன ?
23+

210. திராவிட மொழிக்குடும்பங்களின் எண்ணிக்கை என்ன ?
3

211. திராவிடப்பெருமொழிகள் யாவை ?
தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

212. இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த நாகரிகம் … ஆகும்
திராவிட நாகரிகம்

213. தென் திராவிட மொழிகள் யாவை ?
தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா

214. நடு திராவிட மொழிகள் யாவை ?
தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா

215. வட திராவிட மொழிகள் யாவை ?
குருக், மால்தோ, பிராகுயி

216. திராவிடர் பேசிய மொழி எது ?
திராவிட மொழி

217. "திராவிட" எனும் சொல்லின் பொருள் என்ன ?
திராவிட நாடு

218. திராவிட மொழி, திராவிட இனம், திராவிட நாகரிகம் எனும் சொற்றொடர்களுள் திராவிடம் எனும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கூறியவர் யார் ? எந்த நூலில் கூறியுள்ளார்?
கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.

219. திராவிடம் எனும் சொல்லை முதலில் உருவாக்கியவர் யார்?
குமரிலபட்டர்

220. திராவிடம் எனும் சொல்லை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தவர் யார்?
கால்டுவெல்

221. மொழியியல் அறிஞர் தொடக்க காலத்தில் தமிழையும் அதன் கிளை மொழிகளையும் ........ அல்லது ..... என வழங்கினர்
தமிளியன் , தமுலிக்

222. திராவிட எனும் சொல் தமிழ் எனும் சொல்லிலிருந்து உருவானது எனக்கூறியவர் யார் ?
ஈராஸ் பாதிரியார்

223. கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம் எது ?
இலெமூரியாக் கண்டம்

224. தமிழில் இன்று நமக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பழமையான நூல் எது
தொல்காப்பியம்

225. தொல்காப்பியம் என்பது ... நூல்
இலக்கணம்

226. தொன்மை, தனித்தன்மை,மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம், பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மை பெற்ற மொழி....... எனப்படும்.
செவ்வியல் மொழி

227. மொழியை பிழையின்றி பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவும் துணைபுரிவது .... ஆகும்.
இலக்கணம்

228. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ?
10

229. செய்யுளில் ஓசை குறையும் போதும், சொற்களின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துக்கள் தமக்குரிய ..... மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பது .... ஆகும்.
2, அளபெடை

230. அளபு எனும் சொல்லின் பொருள்
மாத்திரை

231. அளபெடையின் வகைகள் யாவை ?
உயிரளபெடை, ஒர்றளபெடை.

232. உயிர் எழுத்துகளுள் அளபெடுக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன ?
உயிர்நெடில் எழுத்துக்கள் 7

233. உயிர் எழுத்துக்கள் அளபெடுக்கும் போது அவற்றுக்கு இனமான ..... எழுத்துக்கள் அதன் பக்கத்தில் வரும்.
குறில்

234. அளபெடுக்கையில் ஐகாரத்தின் இன எழுத்து எது ?
இ

235. அளபெடுக்கையில் ஔகாரத்தின் இன எழுத்து எது ?
உ

236. உயிரளபெடையின் வகைகள் யாவை ?
செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.

237. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடை ....
செய்யுளிசை அளபெடை

238. ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது .....
இன்னிசை அளபெடை

239. பெயர்ச்சொல் அளபெடுத்து, வினைசெய்ய பொருளில் வருவது .....
சொல்லிசை அளபெடை

240. கெடாஅ......... விடா அர்... எனும் சொற்களில் ......... வந்துள்ளது.
செய்யுளிசை / இசைநிறை அளபெடை

241. செய்யுளிசை அளபெடையில் மறுபெயர் என்ன ?
இசைநிறை அளபெடை

242. கெடுப்பதூஉம் எனும் சொல்லில் வந்துள்ள அளபெடை எது?
இன்னிசை அளபெடை

243. குடிதழீஇக்.. எனும் சொல்லில் வந்துள்ள அளபெடை எது ?
சொல்லிசை அளபெடை

244. தழீ எனும் சொல்லின் பொருள் என்ன ?
தழுவுதல்

245. தழீஇ எனும் சொல்லின் பொருள் என்ன ?
தழுவி

246. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன ?
11

247. ஒற்றளபெடையில் அளபெடுக்காத ஒற்றெழுத்துக்கள் யாவை ?
க்,ச்,ட்,த்,ப்,ற்,ர்,ழ்

248. தமிழாக்கம் தருக

| | |
|---|---|
| சுவிட்ச் | சொடுக்கி |
| ஐஸ்வாட்டர் | குளிர்நீர் |
| கூல் டிரிங்ஸ் | குளிர்சாறுகள் |
| கிரைண்டர் | மின் அரைவை |
| பிரிஜ் | குளிரூட்டும்பெட்டி |
| டீ | தேநீர் |
| வாஷிங்மெஷின் | வெளுக்கை இயந்திரம் |
| டெலிபோன் | தொலைபேசி |

249. "உன்னையே நீ அறிவாய்" எனக்கூறியவர் யார்?
சாக்ரடீஸ்

250. பழமொழிகளுக்கு தமிழாக்கம் தருக

Bend the tree while it is young

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

As is the mother, so is her daughter

தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போலச் சேலை

A friend in need is a friend indeed

உயிர்காப்பான் தோழன்

A maon of courage never wants weapons.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

blood is thicker than water

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

251. "தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா" என சிறப்பிக்கப்பட்டவர் யார்? யாரால் சிறப்பிக்கப்பட்டார்?
அறிஞர் அண்ணா, கல்கி

252. ஜார்ஜ் பெர்னாட்ஷா எந்த நாட்டை சேர்ந்தவர் ?
அயர்லாந்து

253. "இரட்சணிய யாத்திரிகம்" எழுதியவர்?
எச்.ஏ.கிருட்டினனார்

254. இயேசுக்கு மரணதண்டனை விதித்தவர்-
பிலாத்து மன்னன்.

255. இயேசுவின் சீடர் எத்தனை பேர்-
12

256. பன்னிரு சீடர்களுக்கும் இவர் அருளியது-
அறிவுரையும்,பத்துக்கட்டளையும்

257. தன்னரிய திருமேனி என்ற பாடலை பாடியவர்?
எச்.ஏ.கிருட்டின்னார்

258. எச்.ஏ.கிருட்டின்னார் பிறந்த ஊர்?
கரையிருப்பு(திருநெல்வேலி)

259. எச்.ஏ. கிருட்டின்னார் இவரின் காலம்-
23.4.1827-3.2.1900

260. எச்.ஏ. கிருட்டின்னாரின் பெற்றோர்-
சங்கநாராயணம்-தெய்வநாயகி

261. எச்.ஏ. கிருட்டினரின் ஆசிரியர்கள்
தமிழலக்கியம் - சங்கரநாராயணர்
இலக்கணம் - மாணிக்க வாசகத் தேவர்
வடமொழி - பிலவணச் சோதிடர்

262. பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற நூலை எழுதியவர்-
ஜான் பன்யன்

263. இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள்-
ஆன்ம ஈடேற்றம்

264. கிறித்துவக் கம்பர் என அழைக்கப்பட்டவர்-
எச்.ஏ.கிருட்டின்னார்

265. எச்.ஏ.கிருட்டின்னார் பணியாற்றிய பள்ளி-
சாயர்புரம்

266. கிருட்டின்னார் எழுதிய நூல்கள்-
இரட்சணிய சமயநிர்ணயம்,இரட்சணிய மனோகரம்,இரட்சணியக் குறள்

267. சுற்றுப்புறச் சுழலைப் போற்றுகின்ற இனிய திருநாளே-
போகி

268. பாலைப் பொழிந்து தரும் பாப்பா என்ற பாடலை பாடியவர்-
பாரதியார்

269. உலகின் தோன்றிய தொன்மைக்குடிகள்-
தமிழர்களே

270. மாட்டுப் பொங்கலைத் தொடர்ந்து------ நடைபெறுவது.
எருதுவிடும் திருவிழா

271. பொங்கலுக்கு மூன்றாம் நாள்-
காணும் பொங்கல்

272. மஞ்சுவிரட்டு,சல்லிக்கட்டு நடைபெறும் மாவட்டங்கள்-
மதுரை,இராமநாதபுரம்,புதுக்கோட்டை, சிவகாசி

273. தமிழநாட்டு வட மாவட்டங்களில் எருது விடும் விளையாட்டை எவ்வாறு அழைக்கபடுகிறது-
எருதுகட்டு

274. அறுவடைத் திருவிழா கொண்டாப்படும் நாடு-
ஜப்பான்,ஜாவா

275. ஆந்திரா,கருநாடகாவில் கொண்டப்படும் விழா-
மகரசங்கராந்தி

276. பொங்கல் விழா கொண்டாபடும் நாடுகள்-
இலங்கை,மலேசிய, சிங்கப்பூர், மொரிசியசு, இங்கிலாந்து, அமெரிக்கா

277. நேர்மை என்ற துணைப்பட கதை எழுதியவர்-
இராமசாமி

278. ஒன்றன் பெயரான் என்ற பாடல் இடம் பெற்ற நூல்-
நன்னூல்

279. நாரதர் வருகிறார் என்ன ஆகுபெயர்-
உவமையாகு பெயர்

280. நான் சமையல் கற்றேன் என்ன ஆகுபெயர்-
காரியவாகு பெயர்

281. வீணை கேட்டு மெய்மறந்தேன் என்ன ஆகுபெயர்-
கருவியாகுபெயர்

282. செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஒசையும் சிதையாமல் வருவது-
அடிமறிமாற்றுப் பொருள்கோள்

283. அளை என்பதன் பொருள்-
புற்று

284. கல்லிடைக்குறிச்சி எந்த மாவட்டம்-
திருநெல்வேலி

285. ஈசன் குழுமத்தின் தலைவர்-
ஈசுவரன்

286. like hand and glove -
நகமும் சதையும் போல

287. ஒழுக்கமே ஒருவற்கு------- தருவதாகும்
பெருமையும்,சிறுமையும்

288. தமிழ் என்னும் சொல்லுக்கே ------ என்னும் பொருளுண்டு
இனிமை

289. உலகில் வழங்கும் மொழிகள்-
மூவாயிரம்

290. பழமையும் இலக்கிய வளமும் பொருந்திய மொழி-
செந்தமிழ்மொழி

291. தமிழுக்கே உரிய சிறப்பு-
ழகரம்

292. சொற்பொருள் தருக
புகல்வது-
சொல்வது

ஈண்டு-
இவ்விடம்

இருப்பாணி-
இரும்புஆணி

பலபாடு-
பலதுன்பம்

வித்தகன்-
ஆண்டவன்

இரட்சகர்-
காப்பவர்

கீண்டு-
பிளந்து

ஆகடியம்-
ஏளனம்

293. இலக்கணக்குறிப்பு

வன்மறவோர்-
பண்புத்தொகை

இரும்பாணி-
வலித்தல் விகாரம்

சேவடி-
பண்புத்தொகை

கனிவாய்-
உவமைதொகை

294. பிரித்தெழுதுக

காண்டகு-
காண்+தகு

ஈண்டினியான்-
ஈண்டு+இனி+யான்

வெவ்விருப்பாணி-
வெம்மை+இரும்பு+ஆணி

என்றாகடியமான-
என்று+ஆகடியம்+ஆன

ஈண்டிவரே-
ஈண்டு+இவரே

இத்தகைய-
இ+தகைய

295. இரட்சணிய யாத் திரிகம் ------ நூலைத் தழுவி இயற்றப்பட்டது..
பில்கிரிம்ஸ் புரோகிரஸ்...

296. "வில்லெழுதி வாழ்வார் விசும்பு" இந்த வரி இடம் பெற்ற நூல்-
முத்தொள்ளாயிரம்

297. மூவேந்தர்களை பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களை கொண்டது.
முத்தொள்ளாயிரம்

298. முத்தொள்ளாயிரம் ஆசிரியர் பெயர்-
ஆசிரியர் பெயர் தெரியவில்லை

299. முவேந்தர்களின் ஆட்சிசிறப்பு,போர்த்திறன்,கொடை பற்றிய செய்திகளை விளக்கும் நூல்-
முத்தொள்ளாயிரம்

300. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூல்-
முத்தொள்ளாயிரம்

301. மார்போலையில் எழுதும் எழுத்தாணி-
தூரிகை

302. சேர மன்னரின் அடையாள சின்னம்-
வில்

303. சோழ மன்னன் ------ யினை காக்க தன் தசையை அளித்தான்.
புறா

304. கலிங்கத்துப் பரணியை இயற்றியவர்-
சயங்கொண்டார்

305. கலிங்கத்துப் பரணியில் உள்ள தாழிசைகள்-
599

306. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற " என்ற பாடல் இடம் பெற்ற நூல்-
பன்னிரு பாட்டியல்

307. சயங்கொண்டர் பிறந்த ஊர்-
தீபங்குடி(திருவாரூர்)

308. சயங்கொண்டர் எழுதிய நூல்-
இசையாயிரம்,உலாமடல்

309. அண்ணா மிக விரும்பும் இலக்கியம் எது-
கலிங்கத்துப் பரணி

310. முதல் குலோத்துங்க சோழனின் அரசவை புலவர்-
சயங்கொண்டார்

311. ஆயிரக்கணக்கான யானைகளை போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்கு ------ என பெயர்.
பரணி

312. பரணி ------- வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
96

313. தென்தமிழ்த் தெய்வப் பரணி என அழைக்கப்படும் நூல்-
கலிங்கத்துப் பரணி

314. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு என கூறும் நூல்-
புறப் பொருள் வெண்பாமாலை

315. உலகின் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகள்-
193

316. ஏறத்தாழ தமிழனம் பரவியுள்ள நாடுகள்-
154

317. திரைகடலோடியும் திரவியம் தேடி என கூறியவர்-
ஔவையார்

318. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கூறும் நூல்-
மணிமேகலை

319. தமிழர் சிலரை அடிமைக் கூலிக்கு அமர்த்தியவர்கள்-
ஆங்கிலேயர்களும்,பிரஞ்சுகாரர்களும்

320. கோவில் கட்டி திருவிழாக்கள் நடத்தி வரும் நாடுகள்-
சிங்கப்பூர், மலேசியா,பினாங்கு தீவு

321. பரப்பளவில் சிறியதான ------- தீவில் வாழ்பவர்களும் பெரும்பான்மையோர் தமிழரே.
ரியூனியன்

322. தமிழை ஒரு பாடமாக கற்கும் நாடுகள்-
சிங்கப்பூர், மொரிசியசு,மலேசியா,பிஜித்தீவுகள்,தென் அமெரிக்கா, கனடா,பிரிட்டன்

323. யாதும் ஊரே யாவரும் கேளிர் என கூறியவர்-
கணியன் பூங்குன்றனார்

324. தமிழன் என்றால் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு என கூறியவர்-
நாமக்கல் கவிஞர்

325. ஆட்சிமொழியாக தமிழ் திகழும் நாடுகள்-
இலங்கை,சிங்கப்பூர், மலேசியா

326. குடியரசுத்தலைவர் களாகவும் தமிழர் தேர்ந்தெடுக்கும் நாடுகள்-
சிங்கப்பூர், மொரிசியசு

327. தமிழ்தென்றல் என அழைக்கப்பட்டவர்-
திரு.வி.க

328. திரு.வி.க வின் ஆசிரியர்-
கதிரைவேலன்

329. திரு.வி.க பிறந்த ஊர் மற்றும் பெற்றோர்-
துள்ளம்,விருத்தாசலனார்-சின்னம்மை

330. திரு.வி.க பணியாற்றிய பள்ளி-
வெஸ்லி பள்ளி

331. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என முழு முச்சாக வாழ்ந்தவர்-
திரு.வி. க

332. மேடைப் பேச்சுக்கு இலக்கணம் வகுத்தவர்-
திரு.வி.க

333. நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன் என கூறியவர்-
திரு.வி.க

334. திரு.வி.க வின் காலம்-
26.08.1883-17.09.1953

335. திரு.வி.க அவர்கள் மு.வ உதவியுடன் வெளியிட்ட நூல்-
வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுகைப் பிதற்றல்

336. திரு.வி.க நடத்திய இதழ்கள்-
தேசபக்தன்,நவசக்தி

337. என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற உரைநடை நூலை எழுதியவர்-
திரு.வி.க

338. காந்தி தமிழகம் வந்த போதெல்லாம் அவரின் பேச்சினை மொழிபெயர்த்தவர்-
திரு.வி.க

339. திரு.வி.க மொழிநடையை மலை என கூறியவர்-
தெ.பொ.மீனாட்சி சுந்தரர்

340. மேடைத் தமிழின் முன்னோடியாக திகழ்ந்தவர்-
திரு.வி.க

341. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்
16

342. வள்ளுவர் சொல் வாழ்கைக்கு இனிது இது என்ன ஆகுபெயர்-
சொல்லாகுபெயர்

343. பாலை இறக்கு - என்ன ஆகுபெயர்-
தானியாகு பெயர்

344. பொருள்கோள் எத்தனை வகைப்படும்-
8

345. பொருள் கூறுக

உய்ம்மின்
பிழைத்துகொள்ளுதல்

வள்-
நெருக்கம்

துலை-
துலாக்கோல்

ஊசி-
எழுத்தாணி

மொய்யிலை-
நெருங்கியமைந்த இலை

346. பிரித்து எழுதுக

வாயினீர்-
வாயின்+நீர்

காடிதனை
காடு+இதனை

வில்லெழுதி-
வில்+எழுதி

எமதென்று-
எமது+என்று

347. இலக்கணக்குறிப்பு
வாங்குவில்-
வினைத்தொகை

நெடுமதில்-
உரிச்சொற்றொடர்

மாறன்கயிறு-
6ம்வேற்றுமை தொகை

இலைவேல்-
உவமைத்தொகை

கருமுகிலும் வெண்மதியும்--
எண்ணும்மை

348. "அன்பு நாண் ஒப்புரவு..." எனும் குறளில் பயின்று வந்த அணி ?
ஏகதேச உருவக அணி

349. "கொல்லா நலத்தது னோன்மை.. " எனும் குறளில் பயின்று வந்த அணி
எடுத்துக்காட்டு உவமை அளி

350. வெ.இராமலிங்கனாருக்கு நடுவண அரசு செய்த சிறப்பு யாது?
பத்ம பூஷன் விருது அளித்து கௌரவித்தது.

351. காந்தியக்கவிஞர் யார்?
வெ.இராமலிங்கம்

352. "அன்பும் ஆர்வமும்... " எனும் பாடல் இடம்பெற்ற தலைப்பு எது ?
சமுதாய மலர்

353. நாமக்கல் கவிஞர் பாடல்களின் தலைப்புகள் யாவை?
தெய்வத்திருமலர், தமிழ்த்தேன் மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசைமலர், அறிவுரை மலர், பல்சுவை மலர்.

354. நாமக்கல்லாரின் படைப்புகள் யாவை ?

| | |
|---|---|
| இசை நாவல்கள்-3 | கட்டுரைகள்-12 |
| தன்வரலாறு-3 | புதினங்கள்-5 |
| இலக்கியத்திறனாய்வு-7 | கவிதைத்தொகுப்புகள்-10 |
| சிறுகாப்பியயங்கள்-5\ | மொழிபெயர்ப்புகள்-4 |

355. தில்லையாடி வள்ளியம்மையின் குடும்பம் எங்கு குடியேறியது?
தென்னாப்பிரிக்கா - ஜோகன்ஸ்பர்க்

356. வள்ளியம்மை கைது செய்யப்பட்ட இடம் நாள் எது?
வால்க்ஸ்ரஸ்ட் , 23/12/1913

357. வள்ளியம்மை பற்றி காந்தியடிகள் எழுதிய பத்திரிக்கையின் பெயர் என்ன?
இந்நியன் ஒப்பீனியன்

358. தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ள நூல் எது?
தென்னாப்பிரிக்கா சத்தியாகிரகம்.

359. வள்ளியம்மைக்கு நடுவண அரசு செய்த சிறப்பு என்ன?
அஞ்சல் தலையும் அஞ்சல் உரையும் வெளியிட்டு சிறப்பு செய்தது.

360. வள்ளி எனப்பெயரிடப்பட்ட விலங்கு எது? எங்குள்ளது?
பெண்புலிக்குட்டி, சென்னை வண்டலூர் உயிரியல் பூங்கா

361. கோ-ஆப்-டெக்ஸ் சின் .. கிளைக்கு வள்ளியம்மையின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
600 (தில்லையாடி வள்ளியம்மை மாளிகை)

362. ராணி மங்கம்மாளின் கணவர் யார்?
மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கர்

363. ராணி மங்கம்மாளின் மகன் யார்?
அரங்க கிருட்டின முத்து வீரப்பன்

364. மங்கம்மாள் சாலை எது?
மதுரை - கன்னியாகுமரி சாலை

365. தன்மைப்பெயர்கள் யாவை?
நான், யான், நாம், யாம்.

366. முன்னிலைப் பெயர்கள் யாவை?
நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள்.

367. படர்க்கை பெயர்கள் யாவை?
தான், தாம்.

368. பிரித்து எழுதுக:

| | | |
|---|---|---|
| குரங்கியாது | = | குரங்கு+யாது |
| பந்தாட்டம் | = | பந்து+ஆட்டம் |
| உயர்வடைந்தார் | = | உயர்வு+அடைந்தார் |
| காட்டுக்கோழி | = | காட்டு+கோழி |
| கிணற்றுத்தவளை- | = | கிணறு+தவளை |
| செப்புக்குடம் | = | செப்பு+குடம் |
| சுருப்புநாண் | = | சுருப்பு+நாண் |
| கருப்புவில் | = | கருப்பு+வில் |
| சிலப்பதிகாரம் | = | சிலம்பு+அதிகாரம் |

369. மொழிபெயர்ப்புத் தருக

| | | |
|---|---|---|
| சமஸ்தானம் | = | அரசு |
| முக்கியஸ்தர் | = | முதன்மையானவர் |
| சினிமா தியேட்டர் | = | திரையரங்கம் |
| பிளசர் கார் | = | மகிழுந்து |
| ஏரோப்பிளேன் | = | வானூர்தி |
| இலாகா | = | துறை |
| அப்பாயிண்ட் | = | பணி அமர்த்தல் |
| பிரதானம் | = | முதன்மை |

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | = | அறிவியல் |
| பஸ் | = | பேருந்து |
| ரயில் | = | தொடர்வண்டி |
| கஜானா | = | கருவூலம் |
| உத்தியோகஸ்தர் | = | அலுவலர் |
| டிபார்ட்மெண்டல் ஸ்டோர் | = | பல்பொருள் அங்காடி |

370. ரஷ்ய நாட்டு எழுத்தாளர் யார்?
லியோ டால்ஸ்டாய்

371. கருத்தைப் பிறருக்கு உணர்ச்சியோடு விளக்ககூடிய ஆற்றல் உடையதாக இருப்பது ..
மொழி

372. கருத்தை உணர்ச்சியோடு பிறருக்கு விளங்க வைப்பது "சுவை" என தொல்காப்பியத்திலும் "குரல்" என இசைத்தமிழிலும் "விறல்" என நாடகத்தமிழிலும் கூறப்பட்டுள்ளது.

373. உணர்ச்சியோடு கூடிய கருத்தை சொல் வாயிலாக வெளியில் இயக்குவது இயற்றமிழ், இசை வாயிலாக விளக்குவது இசைத்தமிழ், நடிப்பு வாயிலாக விளக்குவது நாடகத்தமிழ் ஆகும்.

374. ஆடற்கலை என்பது முத்தமிழில் … ஆகும்.
நாடகக்கலை

375. நடனம், நாட்டியம் என்பது .. ஆகும்
ஆடற்கலை

376. பழங்காலத்தில் ஆடற்கலை .. எனப்பட்டது.
கூத்துக்கலை

377. ஆடற்கலையில் வல்லவர் யார்?
கூத்தரும், விறலியரும்.

378. ஆடலின் நுட்பம் யாது?
கண்களும், கண் வழி மனமும் செல்ல ஆடுதல்.

379. மொழிபெயர்ப்பு தருக

One flower makes no garland.

தனிமரம் தோப்பாகாது

Little wealth little care.

மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை

Look before you leap.

ஆழம் அறியாமல் காலை விடாதே

Something is better than nothing.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை

Though he endeavours all he can.

புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்.

380. துவ்வா-

நுகராத

குறளை-

புரம்பேசுதல்

381. கவி மணி பிறந்த ஊர்?

தேரூர் கன்னியாகுமரி dt

382. கி.பி.11 ல் வாழ்ந்த பாரசீக கவிஞர்?

கியத்தீன் அபுல்பாத் உமர்கயாம்

383. குழந்தைச் செல்வம் நூலின் ஆசிரியர்?

கவிமணி

384. உமர்க்கயாம் பாடல்களின் எண்ணிக்கை?

115

385. மணிமேகலா தெய்வம் 'மணிமேகலையை வான்வழி தூக்கிச் சென்ற தீவு?.

மணிபல்லவத்தீவு

386. தீவத்திலகையின் உதவியால் மணிமேகலை பெறுவது?.
அமுதசுரபி

387. யாருடைய அறிவுறைப் படி மணிமேகலை ஆதிரையிடம் பிச்சை பெறுகிறாள்?.
அரவணடிகள்

388. 30 ல் ஆபுத்திரன் நாடு அடைந்த காதை ?.
24

389. தண்டமிழ் ஆசான்?.
சாத்தனார்

390. மணிமேகலை காப்பியம் எவ்வகை மதம்?.
புத்தம்

391. இளங்கோவடிகள் காலம்?.
கி.பி.2

392. கூற்று -
எமன்

393. இலக்கண குறிப்பு:
அரைசன்-
இடைப்போலி

394. ஆயம்
தோழியர்கூட்டம்,

கோடு-
கொம்பு

395. பிறித்தறிதல்:
இயல்பீராறு_
இயல்பு+ஈர்+ஆறு

396. "நல்வினை யென்பது யாதென விணவின்" -நூல்?.
மணிமேகலை

397. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடத்தோரே " -நூல்?.
புறநானூறு, மணிமேகலை

398. "காலை மாலை உலாவி நிதம் காற்று வாங்கி வருவோரின் காலை ட்டக் கும்பட்டுக் காலன் ஓடிப் போவானே"-நூல்?
கவிமணி

399. அறுசுவையின் பயன்கள்:உவர்ப்பு-
தெளிவு

400. ஞானப்பச்சிலை-
தூதுவளை

401. பிருங்கராசம்-
கரிசலாங்கன்னி

402. தளை எத்தனை வகைப்படும்?
7

403. காய் முன் நிரை வருவது?
கலித்தளை

404. மாம்பழக்கவி சிங்க நாவலரின் இயற்பெயர்?.
பழனி

405. தமிழ் மருந்தின் ஆசிரியர்?.
கி.ஆ.பெ.விஸ்வநாதம்

406. நெருங்கி அமைந்த இலைபோன்ற வடிவிலான வேலை உடையவன் யார்?
பாண்டிய மன்னன்

407. செல்வம் நிலைத்த உலகமெல்லாம் என் பாண்டியருக்குரியது என எழுத உதவும் எழுதுகோல்களும் ஓலைகளாகவும் பயன்பட்டவை எவை?
எழுத்தாணி : யானைத் தந்தங்கள்
ஓலைகள் : பகைமன்னரின் அகன்ற மார்பு

408. மூவேந்தர்களைப் பற்றிய 3 தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் எது?
முத்தொள்ளாயிரம்

409. "மருப்பூசி யாக... " எனத்தொடங்கும் பாடலில் பயின்று வந்த அணி எது ?
உருவக அணி

410. புறத்திரட்டு வாயிலாக கிடைக்கப்பெற்ற முத்தொள்ளாயிரம் பாடல்களின் எண்ணிக்கை ...
108 வெண்பாக்கள்

411. பழைய உரை மேற்கோள்களாக கிடக்கப்பெற்ற முத்தொள்ளாயிரம் பாடல்களின் எண்ணிக்கை ?
22 வெண்பாக்கள்

412. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் யார்?
செயங்கொண்டார்.

413. சயங்கொண்டார் இயற்றிய பிற நூல்கள் எவை?
இசையாயிரம், உலாமடல்

414. சயங்கொண்டார் பிறந்த இடம் எது?
தீபங்குடி (திருவாரூர் மாவட்டம்)

415. குலோத்துங்க சோழனின் அவைப்புலவராய் இருந்தவர் யார் ?
செயங்கொண்டார்

416. பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் எது ?
கலிங்கத்துப்பரணி

417. கலிங்க மன்னன் யார்?
அனந்தபத்மன்

418. கலிங்க மன்னனை வென்ற சோழ மன்னன் யார்?
குலோத்துங்கன்

419. கலிங்கத்துப்பரணியில் தாழிசைகள் எண்ணிக்கை என்ன?
599

420. சயங்கொண்டரின் சமக்காலப் புலவர் யார்?
ஒட்டக்கூத்தர்

421. ஒட்டக்கூத்தர் கலிங்கத்துப்பரணி எவ்விதம் பாராட்டியுள்ளார்?
தென்தமிழ் தெய்வப்பரணி

422. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவ னுக்கு வகுப்பது பரணி" எனும் வரிகள் இடம் பெற்ற நூல் எது?
பன்னிரு பாட்டியல்

423. பரணி இலக்கியங்கள் யாவை?
தக்கயாகப்பரணி, மோகவதைப்பரணி, சீனத்துப்பரணி,வங்கத்துபரணி, பாசவதைப்பரணி, திராவிடத்துப்பரணி

424. "எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே" எனக்கூறியவர் யார்?
பேரறிஞர் அண்ணா

425. "பரணிகோர் செயங்கொண்டார்" எனகூறியவர் யார்?
பலப்பட்டடைச் சொக்கநாதபுலவர்

426. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி" எனும் தொடர் இடம்பெற்ற நூல் எது?
புறப்பொருள் வெண்பாமாலை

427. தமிழினம் தோன்றிய இடம் எது?
குமரிக்கண்டம்

428. தமிழின பரவியுள்ள நாடுகளின் எண்ணிக்கை என்ன?
154

429. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கை
192

430. சாதுவன் வாணிகம் செய்யும்பொருட்டு கடல்கடந்து சென்ற குறிப்பு இடம்பெற்ற நூல் எது?
மணிமேகலை

431. தமிழ் ஆட்சி மொழியாக உள்ள நாடுகள் எவை?
இலங்கை, சிங்கப்பூர், மலேசியா

432. தமிழ்தென்றல் எனப்போற்றப்படுபவர் யார்?
திரு.வி.கல்யாண சுந்தரனார்

433. திரு.வி.க. கல்வி பயின்ற பள்ளி எது?
வெஸ்லி பள்ளி, இராயப்பேட்டை

434. திரு.வி.க. யாரிடம் தமிழ்பயின்றார்?
கதிரைவேலர்

435. "தமிழை வளர்க்க வேண்டும் என்றால், பிற மொழியை வெறுக்கவேண்டும் என்பது பொருளன்று" - இது யாருடைய கூற்று?
திரு.வி.க

436. திரு.வி.க. வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்றவர் யார்?
தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

437. நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன் என்றவர் யார்?
திரு.வி.க

438. 17/09/1953 அன்று தனது தமிழ் மூச்சுக்கு விடையளித்தவர் யார்?
திரு.வி.க

439. வள்ளுவர்சொல்- எவ்வகை ஆகுபெயர்?
சொல்லாகுபெயர்

440. பாலை இறக்கு -எவ்வகை ஆகுபெயர்?
தானியாகுபெயர்

441. செய்யுளின் முதலில் அமைந்த சொல்லும் , இறுதியில் அமைந்த சொல்லும் பொருள்பட பொருத்துவது ....
விற்பூட்டுப் பொருள்கோள்

442. "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை இடைத்தி வுலகு"
- இக்குறட்பாவில் பயின்று வந்த பொருள்கோள்.
விற்பூட்டுப் பொருள்கோள்

443. செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது ...
தாப்பிசைப்பொருள்கோள்

444. "இறந்தார் இறந்தார் அனையர் சினத்தை துறந்தாயர் துறந்தார் துணை" -
இக்குறட்பாவில் பயின்று வந்த பொருள்கோள்?
தாப்பிசைப்பொருள்கோள்

445. பைந்தமிழ் ஆசான் யார்?
கா.நமச்சிவாயனார்

446. உயர்நிலை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பாடநூலை எழுதியவர் யார்?
கா.நமச்சிவாயனார்

447. மொழிபெயர்ப்புத் தருக

One doth the act, another hath the blow
பழி ஓரிடம், பாவம் ஓரிடம்

Every fox must at last pay his skin to the flayer
பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான்

Money makes many things
பணம் பத்தும் செய்யும்.

The day has eyes, the night has ears.
பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே

**What comes fron the cradle goes to the grave.**

**தொட்டில் பழக்கல் சுடுகாடு மட்டில்**

கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com கல்வி அமுது